


●பா.ராகவன்

கென்யாவும் தான்சானியாவும் கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கின்றன. ஒசாமா பின்லேடனும் அவருடைய அடிப்பொடிகளும் ஆப்கனிஸ்தானில் இருந்தார்கள். நேரடித் தொலைபேச்சு கூடாது. ஈமெயில் அனுப்பமுடியாது. புறாவின் காலில் கடிதம் கட்டி அனுப்பி, பதில் கடிதம் வாங்குவதென்பதற்குள் விடிந்துவிடும். எனில், எப்படித் தொடர்புகொள்வது?

அல் காயிதாவில் ஒரு வழக்கம் உண்டு. எந்த ஒரு தாக்குதல் திட்டம் முடிவு செய்யப்பட்டாலும், திட்டத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டத்திலும், மேலிட ஒப்புதல் பெற்றாக வேண்டும்.

ஒவ்வொரு திட்டத்துக்கும் ஒரு பொறுப்பாளர் இருப்பார். எல்லாவற்றையும் அவரே தீர்மானிப்பார் என்றாலும், ஒவ்வொரு தீர்மானத்தையும் ஒசாமாவுக்குத் தெரியப்படுத்தி, சம்மதம் பெற்றுத்தான் செயல்படுத்த வேண்டும். இதனை இன்னொரு விதமாகவும் சொல்லலாம்.

Tracking என்பார்கள். நடப்பது ஒவ்வொன்றையும் மேலிடம் உடனுக்குடன் தெரிந்துகொள்ளவேண்டும். எங்காவது தவறு இருந்தால், உடனுக்குடன் சரிசெய்துகொள்ள அது ஒரு வாய்ப்பு. கோடிக்கணக்கில் பணம் செலவழித்து ஒரு காரியத்தைத் திட்டமிடும்போது, இம்மாதிரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியம் என்று, அல் காயிதா நினைத்தது.

ஆனால், அமெரிக்க உளவுத்துறை கண்கொத்திப் பாம்பாக அல் காயிதாவை உலகம் முழுவதும் கவனித்துக்கொண்டிருந்த வேளையில், அத்தனை பெரிய தூதரகத் தாக்குதல் திட்டம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், திட்டத்தில் மறைமுகமாகக் கூட எந்த ஓட்டையும் இருந்துவிடக் கூடாது.

இதற்காகத்தான், தகவல் தொடர்புக்காக அந்த முக்கோணத்தைப் போட்டார்கள்.

ஆப்பிரிக்காவிலிருந்து ஆப்கனுக்குத் தகவல் தொடர்பு கூடாது. அவ்வளவுதானே? ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குத் தொடர்பு கொள்வதில் எந்தப் பிரச்னையும் இல்லையே?

உடனடியாக காலீத் அல் ஃபவாஸ் (Khalid al Fawaaz) என்கிற லண்டன்வாழ் சவூதி அரேபியர் ஒருவரைப் பிடித்தார்கள். இந்த ஃபவாஸ் ஏற்கெனவே அல் காயிதா உறுப்பினரா என்று உறுதியாகத் தெரியவில்லை. அல் காயிதாவின் அட்டண்டன்ஸ் ரிஜிஸ்டரில் இவரது பெயரைப் பார்க்கமுடியவில்லை. ஒருவேளை அந்தச் சமயத்துக்குப் பொருத்தமானவர் என்று கருதி வாடகைக்கு எடுத்திருக்கலாம்.

ஓரளவு வசதியான, வீட்டில் இரண்டு மூன்று டெலிபோன் லைன்கள், தனியே ஒரு இன்டர்நெட் கேபிள் இணைப்பு, ஃபேக்ஸ் என்று ஏகப்பட்ட சமாசாரங்களை வைத்திருந்த ஒரு முன்னாள் தொலைத்தொடர்புத்துறை ஆசாமி. இதையெல்லாம் விட விசேஷம், பாகிஸ்தானில் இவரது

சகலபாடி ஒருத்தர் டெக்ஸ்டைல் பிசினஸ் செய்துகொண்டிருந்தார் என்பது. பாகிஸ்தானிலிருந்து லண்டனுக்குத் துணிமணிகள் ஏற்றுமதி/இறக்குமதி செய்யும் அவரது பணிக்கு, இந்த ஃபவாஸ் பரமாத்மாவின் ஒத்துழைப்பு நிறைய இருந்தது.

ஆக, இதுதான் பட்சி என்று முடிவு செய்து, அவரைப் போய் மடக்கினார்கள். திட்டம் என்னவென்றால், கென்யா மற்றும் தான்சானியாவில் அல் காயிதா ஆசாமிகளின் தினசரி நடவடிக்கைகளை ஒவ்வொரு தினமும் நட்டநடுராத்திரி ஸ்டேட்மெண்ட் மாதிரி தயாரித்து, முழுக்கமுழுக்க சங்கேத மொழியில் அதைத் தொலைபேசி வழியே ஃபவாஸுக்குப் படித்துவிட வேண்டும்.

ஃபவாஸுக்கு அதில் ஓர் அட்சரம் கூடத் தெரியாது, புரியாது. கென்யாவின் வெண்டைக்காய் விளைச்சல் குறித்த வயலும் வாழ்வும் நிகழ்ச்சி மாதிரி, ஏதோ ஒரு பக்கம் படிப்பார்கள் போலிருக்கிறது. போன் மூலம் காதில் விழும் வரிகளை அவர் அப்படியே அரபி ஷார்ட் ஹேண்டில் எழுதிக்கொள்ள வேண்டியது.

எழுதிய சமூகநலக் கட்டுரையை உடனே தன் பாகிஸ்தான் சகலபாடிக்கு அவர் ஃபேக்ஸ் பண்ணிவிடுவார். சம்பந்தப்பட்ட சகலபாடி வீட்டு வாசலில், அல் காயிதாவின் பாகிஸ்தான் பங்காளிகள் ரெடியாக வந்து நிற்பார்கள். ஃபேக்ஸ் மிஷினிலிருந்து அவர் தாளை உருவியதுமே, அவர் கையிலிருந்து உருவிக்கொண்டு ஓடியே போய்விடுவார்கள்.

பாகிஸ்தானிலிருந்து ஆப்கனிஸ்தானுக்கு ஒரு தகவலைக் கொண்டுசேர்ப்பது என்பது சமையல் ரூம் ஜன்னலைத் திறந்து, பக்கத்துவீட்டு மாமியிடம் அரை தம்ளர் பால் கடன் கேட்பது போல, அத்தனை சுலபமானது என்பதைச் சொல்லவேண்டியதில்லை அல்லவா?

மிகத் திறமையான இந்த யோசனை உதித்ததுமே செயல்படுத்திவிட்டார்கள். திட்டம் செயல்படுத்தப்படவிருந்த ஆகஸ்ட் 7-ம் (1998) தேதிக்குச் சரியாக ஒன்பது தினங்களுக்கு முன்னதாக, இந்தத் தகவல் தொடர்புப் பரிமாற்றங்கள் ஆரம்பித்தன. ஒவ்வொரு நாளும் ஆப்பிரிக்காவிலிருந்து லண்டன் வழியே பாகிஸ்தானுக்கு ஃபேக்ஸ் போவதும், மறுநாள் காலை ஆப்கனிலிருந்து அதே பாகிஸ்தான் வழியே லண்டனைத் தொட்டு, ஆப்பிரிக்காவுக்குப் பதில் போவதுமாக ஒரு பிரச்னையும் இல்லாமல் தொடர்புகொண்டார்கள்.

அல் காயிதாவுக்கு இம்மாதிரி சில்லறை விஷயங்களில்தான் கவனம் அதிகம் தேவைப்பட்டதே தவிர, கென்யா மற்றும் தான்சானிய அமெரிக்கத் தூதரகங்களைத் தகர்ப்பது பெரிய விஷயமே இல்லை.

பொதுவாக தூதரகங்கள் வீதிச் சந்தடியிலிருந்து ஒதுங்கி, குறைந்தது நூறுமீட்டர் தொலைவிலாவது அமைய வேண்டுமென்பது, அமெரிக்க அரசின் விதி. அந்த நூறு மீட்டர் தூரத்திலும் கடுமையான கண்காணிப்பு வளையங்கள் இருக்கும். தூதரகக் கட்டடத்தின் மேல் மாடியிலும் எப்போதும் துப்பாக்கியில் குறிபார்த்தபடி, தோரணவாயில் காப்போன் உட்கார்ந்திருப்பான். வாசலிலும் செக்யூரிடி பலமாக இருக்கும். சும்மா கடலை மிட்டாய் விற்பவனெல்லாம் உள்ளே போய்விடமுடியாது.

ஆனால், மேற்படி இரு தேசங்களிலும் அமெரிக்கத் தூதரகங்கள் அமைந்திருந்த இடங்களுக்கு இந்த வசதி வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது. முக்கியமாக, அந்த நூறு மீட்டர் நிபந்தனை இங்கே செல்லுபடியாகவில்லை. மெயின் ரோட்டிலேயே முனியாண்டி விலாஸ்களுக்குப் பக்கத்தில்தான் அமெரிக்கத் தூதரகக் கட்டடங்கள் இருந்தன. வாசலிலேயே சிறுவர்கள் கோலியாடுவார்கள், மூச்சா போவார்கள். 'இன்னாமே மன்ஸூல இன்னா நெனச்சிங்கீரே' என்று குழாயடிப் பெண்கள் குஸ்தி பயில்வார்கள். யாராலும் ஒன்றும் செய்யமுடியாது.

தூதரகத்துக்கென்று தனியே ஒரு ரேடியோ அலைவரிசை உண்டு. தகவல் தொடர்புக்காக

அவர்கள் பிரத்தியேகமாக வைத்திருந்த வயர்லெஸ் அலைவரிசை அது. ஆனால், எப்போது ஆன் செய்தாலும் அந்த ஊர் ரேடியோ மிர்ச்சி, சூரியன் எஃப்.எம்., உழவர்களுக்கு ஒரு வார்த்தை எல்லாம் கேட்கும். வாஷிங்டனிலிருந்து அதிகாரிகள் ஏதாவது முக்கிய விஷயமாகப் பேச முற்பட்டால், இடையே ஆப்பிரிக்க சரோஜ் நாராயண் சுவாமி செய்தி வாசிப்பார்.

வேறு வழியில்லாமல்தான் சகித்துக்கொண்டிருந்தார்கள். தவிரவும், ஏராளமான உள்ளூர்த் தீவிரவாத இயக்கங்கள், அங்கே பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு காலமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தபோதிலும், இம்மாதிரி தூதரகத் தாக்குதலுக்கெல்லாம் எவ்வித அறிகுறியும் தென்பட்டிராத பிரதேசம் அது. தீவிரவாதிகள் பொதுவாக அங்கே பார்லிமெண்டைத்தான் தாக்குவார்கள். அல்லது ஊருக்குள் புகுந்து குடிசைகளைக் கொளுத்துவார்கள். அமெரிக்காக்காரர்களிடமெல்லாம் அழும்பு பண்ணிக்கொண்டிருக்கமாட்டார்கள். அப்படி ஒரு சிந்தனை கூட யாருக்கும் எட்டிப்பார்த்ததில்லை.

இத்தனைக்கும் 1996-ம் ஆண்டு கென்யாவுக்கான அமெரிக்கத் தூதராக வந்து சேர்ந்த ப்ரூடென்ஸ் புஷ்நெல் (Prudence Bushnell) என்கிற பெண்மணி, உத்தியோகத்தில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே கழுதையாகக் கத்திக்கொண்டிருந்தார். இந்த இடம் சரியில்லை, என்றைக்காவது ஒருநாள் ஆபத்து வந்தே தீரும் என்று ஒவ்வொரு அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் அமெரிக்க உள்துறை அமைச்சகத்துக்கும் வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கும் கடிதம் எழுதிக்கொண்டே இருந்தார்.

யாராவது காதில் போட்டுக்கொண்டால்தானே? இந்தப் பொம்மனாட்டிக்கு வேற வேலையில்லை என்று அலட்சியப்படுத்திவிட்டார்கள். விளைவு?

ஆகஸ்ட் 7-ம் தேதி, 1998-ம் வருஷம் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

கென்யா மற்றும் தான்சானிய நேரப்படி சரியாக அன்று காலை 10.45 மணி. (வாஷிங்டனில் அப்போது அதிகாலை 3.45) இரண்டு தேசங்களின் அமெரிக்கத் தூதரகங்கள். இரண்டு சுசுகி வேன்கள். இரண்டு தற்கொலைப்படை வீரர்கள். போதிய அளவுக்கு வெடிமருந்துகளை நிரப்பிக்கொண்டு நேரே தூதரகத்துக்குள் புகுந்துவிட்டார்கள்.

நைரோபியில் தூதரகம் இருந்த இடம், கென்யாவிலேயே மிகவும் பிசியான பிராந்தியம். டவுண்டவுன் ஏரியா என்பார்கள். எப்போதும் ஆள் நடமாட்டமும் வாகனப்போக்குவரத்தும் அதிகமாக இருக்கும். சகட்டுமேனிக்கு வண்டிகளை ரிவர்ஸ் எடுப்பார்கள். எந்தக் கட்டடத்துக்குள்ளும் எளிதில் நுழைந்து திரும்புவார்கள்.

அந்தமாதிரி ஒரு ரிவர்ஸ் எடுக்கும் உத்தேசமுடன் போவதுபோலத்தான் நைரோபி தூதரக வளாகத்துக்குள் அல் காயிதாவின் வேன் நுழைந்தது. நுழையும்வரை சாதாரண வேகத்தில் போன அந்த வண்டி, உள்ளே அடியெடுத்து வைத்ததும் அசுரப் பாய்ச்சலில் சீறிப் பாய்ந்து கட்டடத்தின் மீது மோதி வெடித்தது.

பன்னிரண்டு அமெரிக்கர்கள் அந்தக் கணத்திலேயே பலியானார்கள். சுமார் நாலாயிரத்தி ஐந்நூறு பேர் குற்றுயிரும் கொலை உயிருமாகப் போராடிக்கொண்டிருந்தார்கள். கட்டடம் உருக்குலைந்து உதிர, உயிர் பிழைத்தவர்கள் திசை தெரியாமல் கண்டபடி தலைதெறிக்க ஓடத் தொடங்கினார்கள்.

வினாடிக்கும் குறைவான நேரம்தான். பிராந்தியமே ஸ்தம்பித்து, உடனே உடனே அலறி ஓடத் தொடங்கியது.

தான்சானியாவிலும் இதே முறைப்படிதான் மோதி வெடித்தார்கள். பதினொரு பேர் மரணம் அங்கே. எண்பத்தைந்து பேர் காயமடைந்தார்கள்.

சுமார் ஐம்பதாயிரம் டாலர் செலவு மதிப்பீட்டில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் இது. (அதிக செலவில்லை, பத்தாயிரம் டாலர்தான் என்று சொல்பவர்களும் உண்டு. அல் காயிதாவின் கணக்குப்பிள்ளை ஒரிஜினல் கணக்குகளை இன்னும் வெளியிடவில்லை!)

சோமாலியாவைச் சேர்ந்த திஹாப் ஷில் (Dihab Shill) என்னும் ஹவாலா கம்பெனியின் மூலம் இதற்கான பணப்பட்டுவாடா செய்யப்பட்டதாகப் பின்னர் கண்டுபிடித்துச் சொன்னார்கள். நைரோபியில் இஸ்மாயில் ஜமா அலி (Ismail Jama Ali) என்கிற 'பரோபகாரி' ஒருத்தர் இருந்தார். மேற்படி திஹாப் ஷில் நிறுவனத்தின் கென்யக் கிளைக்கு அவர்தான் பொறுப்பாளர். அடிப்படையில் அல் காயிதா ஆதரவாளரான இந்த இஸ்மாயில் ஜமா அலி, தமது நிறுவன மேலிடத்துக்குத் தெரியாமல், இந்தத் தூதரகத் தாக்குதல் திட்டத்துக்கு அல் காயிதாவுக்கு உதவி செய்து, தானும் மாட்டிக்கொண்டு, நிறுவனத்தையும் இழுத்து மூடி சீல் வைக்கச் செய்தார். இந்தத் தூதரகத் தாக்குதல்களில் அல் காயிதா குறைந்தது ஐந்நூறு அமெரிக்கர்களாவது கொல்லப்படுவார்கள் என்று எதிர்பார்த்தது. ஆனால், நடந்தது வேறு. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கென்யா மற்றும் தான்சானியர்கள்தாம். அதிலும் குறிப்பாக நிறைய முஸ்லிம்கள்.

இதுபற்றிப் பின்னொரு சமயம் ஒசாமா பின்லேடனே பேசியிருக்கிறார்.

"ஆம். நாங்கள் அமெரிக்கர்களைத்தான் குறிவைத்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக எங்கள் சகோதர முஸ்லிம்கள் பலரே இறக்கும்படி ஆகிவிட்டது. ஆனால், இதற்காக நாங்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்க முடியாது. யுத்தத்தில் நம்மவர்களே இறக்க நேர்ந்தாலும் யுத்தம் நிறுத்தப்படக்கூடாது. நமது வருத்தங்களும் அனுதாபங்களும் அவர்களுக்கு உண்டு. அதே சமயம், செய்த செயல் தவறு என்று நினைத்து ஓய்ந்துவிட நாங்கள் தயாராக இல்லை."

மறுபுறம் அதிர்ச்சியிலும் அவமானத்திலும் நொறுங்கிப்போயிருந்த அமெரிக்க அரசு, ஒரே நாளில் சிலிர்த்தெழுந்து, தன்னுடைய அல் காயிதா வேட்டையை ஆரம்பித்தது. கூடவே, அவர்களுக்கு அப்போது இன்னொரு நோக்கமும் இருந்தது. என்னத்தையாவது செய்து இந்தப் பாழாய்ப்போன சதாம் உசேனை நசுக்கமாட்டோமா என்று அவர்கள் ஏங்கத் தொடங்கியிருந்த காலகட்டம் அது.

ஆகவே, அமெரிக்க உளவுத்துறை, அல் காயிதாவுக்கும் சதாம் உசேனுக்கும் தொடர்பு இருக்கிறது, சதாம்தான் ஆப்பிரிக்கத் தாக்குதலுக்கு நிதி உதவி செய்திருக்கிறார் என்று ஒரு வதந்தியைக் கொளுத்திப் போட்டது.

குறிப்பிட்ட தூதரகத் தாக்குதல் தொடர்பான புலனாய்வை இந்த வதந்தி கொஞ்சம் குழப்பியது என்பதை, மறுக்கமுடியாது. பிறகு, அந்த வதந்தி அர்த்தமற்றது என்பதை அமெரிக்காவே ஒப்புக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.